*செய்தி வெளியீடு எண் :56* *நாள் :30.09.2019*

**தேனி மாவட்டம்,**
**காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு அனைத்து ஊராட்சிகளிலும்**
**கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

*****

தேனி மாவட்டத்தில் உள்ள 130 கிராம ஊராட்சிகளிலும் 02.10.2019 காந்தி ஜெயந்தி நாளன்று **முற்பகல் 11.00** மணியளவில் கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுகுறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம், ஊரக பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள். தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் குடிமராமத்து என்ற மக்கள் இயக்கம், குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், ஊரக பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப்பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

மேலும், மக்கள் திட்டமிடல் இயக்கம் (People's Plan Campaign), ஊட்டச்சத்து இயக்கம் (POSHAN Abhiyaan), நெகிழி உற்பத்தி தடை செய்தல், முழு சுகாதார தமிழகம், முன்னோடி தமிழகம், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகள். தூய்மையே சேவை இயக்கம், திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைத்தல், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மைய கழிப்பறைகள், பள்ளிகளில் சுகாதார விழிப்புணர்வு போட்டிகள் நடத்துதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஜல்சக்தி அபியான் (Jal Sakthi Abhiyaan), பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) குறித்து விவாதித்து முடிவு செய்யப்பட உள்ளன.

எனவே, அனைத்து பொதுமக்களும் தவறாது கிராம ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**